



1 அம்மும்மா கண்ணாடி!
அம்முப்பா பொத்தகம்!
எம்மாம் பெரியவள்
ஆகிவிட்டேன்!
இங்கே பாருடா செம்மல்!—அடி
இங்கே பாரடி கயல்!

2 ஆசிரியை நானாவேன்!
அனைவருமே கேளுங்கள்!
காசு ஒன்றும்
தரவேண்டாம்!
கருத்தாய்க் கேளடா செம்மல்!—இங்கே
காதைத் திருப்படி கயல்!

3 நாற்காலிமேல் அமருவேன்!
மொட்டானில் கால் நீட்டுவேன்!
நேராய்ப் பார்த்தால்
வெட்கம் வரும்!
நிமிர்ந்து கேளடா செம்மல்!—இதை
நீயும் கேளடி கயல்!

**குரல்: 10; இசை: 8.**
**விலை: 35 காசு.**



ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

# அமைதி மொழியில் பேசவேண்டிய செய்தி.

—மா. பூங்குன்றன், அறி. இ., க. மு.

புகழ்மிக்க மெய்யறிவாளர் எமர்சன் அமெரிக்காவில் வாழ்ந்தவர். அவர் காலத்தில் அவர் புகழ்ந்த மெய்யறிவாளராகத் தாமசு கார்லைல் என்பவர் இங்கிலாந்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்.

எமர்சன் நெடுநாட்களாகத் தாமசு கார்லைலைப் பார்க்க வேண்டும். பல செய்திகளைப் பற்றி அளவளாவ வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தார். அது மட்டும் அல்லாமல் தம் நண்பர்களிடமெல்லாம் அவரைப்பற்றியும், தாம் அவரைக் கண்டு பேசவிருப்பதையும் கூறிக் கொண்டிருந்தார். அவர் காலத்தில் இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் சரியான செலவுத் தொடர்புகள் இல்லாமல் இருந்தன. அதனால் அவரால் இங்கிலாந்துக்குச் செல்ல முடியமால் இருந்தது. இருப்பினும் எப்படியும் சென்றுவிட வேண்டும் என்று முயன்று விசைப் படகு ஒன்றை வாடகை பேசி இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். இங்கிலாந்துக்குச் சென்று நேரே அவர் வீட்டைக் கண்டுபிடித்து, அவர் பணியாளிடம் 'கார்லைலைப் பார்க்க வேண்டும்' என்று கூறினார். அவன் அவர் தனியறையில் இருப்பதாகக் கூறி அந்த அறையையும் திறந்து உள்ளே அனுப்பினேன்.

எமர்சன் நேரே உள்ளே சென்றார். அங்குத் தாம் நெடுநாளாகப் பார்க்க விரும்பிய கார்லைல் அமைதியுடன் தம்மைப் பார்ப்பதைக் கவனித்தார். அங்குப் போடப்பட்டிருந்த நாற்காலிகளுள் கார்லைலுக்கு மிக அருகில் உள்ள ஒரு நாற்காலியில் சென்று அமர்ந்தார். அமர்ந்து கார்லைலைப் பார்த்தார். கார்லைலும் நேரே எமர்சனைப் பார்த்தார். இவ்வாறே ஒன்றரை மணிநேரம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர ஒரு சொல்லும் ஒருவரின் வாயிலிருந்தும் வெளிவரவில்லை.

ஒன்றரை மணிநேரத்திற்குப் பிறகு ஒரு சொல்லும் பேசாமல் எமர்சன் எழுந்து, தாம் வந்தது போலவே திரும்பி அமெரிக்காவிற்குப் போய்ச் சேந்தார். அதன் பிறகு நண்பர் ஒருவர் எமர்சனிடம், "கார்லைலைப் பார்த்துப் பேசியதில் புதிய கருத்து எதாவது கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டதற்கு, எமர்சன், "உலகியல் தொடர்புக்கு அப்பாற்பட்ட கருத்துகளை அமைதி மொழியில்தான் பேச முடியும் என்பதை முதன் முதலில் தெரிந்து கொண்டேன்" என்றார்.

---

## சிறுவர்கள் கற்றுக்கொள்ளும் இடங்கள்!

இலீசுக்கு அருகிலுள்ள செராயிங் நகரைச் சேர்ந்த ஓர் எட்டு அகவைப் பையன், ஒரு கடையிலிருந்து 15,000 பிராங்குகளைத் திருடியதற்காகச் சிறை செய்யப்பட்டான். 'நான் ஆரவாரமாக வாழவிரும்பினேன்" என்று அவன் சொன்னான். பெரும் பணக்காரர்களின் செல்வ மிதப்பு வாழ்க்கையைத் தொலைக்காட்சி, திரைப்படங்களில் அடிக்கடி பார்த்துச் சுவைத்து வந்ததால், அவனுக்கு இத்தகைய எண்ணம் ஏற்பட்டதாம். அவன் சிறு பையனாக இருந்ததால், தனது திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அகப்பட்டுக் கொண்டான். o

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் 10] தி.பி. 2009. துலை. (நவம்பர். 1978) [இசை 8


## மாணவர் போராட்டங்கள்.

இப்பொழுதெல்லாம் மாணவர் போராட்டங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. சிறு சிறு செய்திகளுக் கெல்லாம் மாணவர்கள் கல்லூரி நிறுத்தம், பள்ளி நிறுத்தம் செய்கின்றனர்; ஊர்வலங்கள் போகின்றனர்; போராட்டங்கள் நிகழ்த்துகின்றனர். எங்கோ உள்ள கல்லூரி ஒன்றில் மாணவர் ஒருவர் கண்டிக்கப் பெற்றாலோ தண்டிக்கப் பெற்றாலோ, ஊர் முழுவதிலும் நாடு முழுவதிலும் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் அனைத்திலும் உள்ள பெரும்பாலான மாணவர்கள் கல்விக் கூடங்களை விட்டு வெளியே வந்து தெருக்களில் ஊர்வலங்கள் போவதும், மாவட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் இவர்களைச் சந்திக்கக் கோருவதும், முறையீடுகள் செய்வதும், அவை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதும், தீர்க்கப்படாவிட்டால் போராட்டத்தில் இறங்குவதும், தெருவில் போகும் வரும் வண்டிகளையெல்லாம் நிறுத்துவதும், பொதுமக்களை இறக்கி விட்டுவிட்டு ஊர்திகளையும் இயங்கிகளையும் கொளுத்துவதும், கற்கள் வீசிக் கண்ணாடிகளையும், வண்டிகளையும் நொறுக்குவதும், வண்டி ஓட்டுநர்களையும் நடத்துநர்களையும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து கொண்டு தாக்குவதும் இப்பொழுது அன்றாடம் நடைபெறும் அல்லது கேள்விப்படும்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்,
தென்மொழி மின் அச்சகம், சென்னை–600 005 (தமிழகம்).

நிகழ்ச்சிகள் அல்லது செய்திகள் ஆகிவிட்டன. இவை மனத்துக்கு அமைதியின்மையையும் அறிவுக்கு மருட்சியையும ஊட்டுகின்றன. இவற்றுல் பெற்ருேர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், அமைச்சர்கள், பொது மக்கள், காவலர்கள் முதலிய அத்தனைப்பேரும் கவலையும் அச்சமும் குழப்பமும் அடைய வேண்டியிருக்கின்றது என்ன செய்வது என்று தெரியாமல் எல்லாரும் துன்புற வேண்டியும் இருக்கின்றது.

பொதுவாக மாணவர்களுக்குப் பலவகையான குறைகள் நேரலாம். அவர்களின் பருவத்துக்கும், துடிப்புக்கும், நிலைகளுக்கும், தேவைகளுக்கும் தக்கபடி அவர்களின் உணர்வு நிலைகள் மாறுபடுகின்றன. எனவே மற்றவர்களுக்குக் குறையாகப் படாதது அவர்களுக்குக் குறையாகப் படலாம். ஆனல் அவர்களுக்குக் குறைகளாகப் பட்டனவெல்லாம் முழு அளவிலும் குறைகளாக இல்லாமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக மாணவர் ஒருவர் தவறு செய்திருக்கலாம். அதற்காக அவர் கண்டிக்கப்படுவதோ, கடுமையான தவருக அல்லது குற்றமாக இருப்பின் தண்டிக்கப் படுவதோ தவறு என்ருகாது. அவ்வாறு தண்டனை அல்லது கண்டிப்பு இல்லாமற் போனல் தவறுகளும் குற்றங்களுமே மலிந்துவிடும் என்பதை மாணவர்கள் உணர்தல் வேண்டும். மாணவர்கள் குற்றமே செய்யமுடியாது என்று சொல்வதற்கில்லை. எல்லாரும் மாணவப் பருவத்தில் தவறும் குற்றங்களும் செய்பவர்கள்தாம்; செய்தவர்கள்தாம். அவற்றுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களும் கண்டிக்கப் பட்டவர்களும் இருக்கவே செய்வர். அதற்காக அக்காலங்களில் ஏந்த வகைப் போராட்டமும் நிகழ்ந்ததில்லை. ஒரு சிறு எதிர்ப்பும் கூட நிகழாத காலமும் இருந்திருக்கிறது.

ஆனல், அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் மாணவர்கள் சில நிலைகளில் எதிர்ப்புகள் காட்டுவதைக் கூடாது என்று சொல்ல எவரும் முன்வரார். எனினும் எதிர்ப்பு எதற்குக் காட்டுவது என்பதில் தெளிவும் கூர்மையான முன்னறிவும் வேண்டும் என்பதே நம் கருத்து. அதுபற்றிய சில உண்மை நிலைகளை மாணவர்கள் உணர்ந்து கொண்டு, தம் நடைமுறைகளில் சிறிது தெளிவு ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

'தனி மாந்தன் நல்லவன்; மாந்தரே கெட்டவர்' (Man is good; but men are bad) என்பார் வங்காளப் பெரும் பாவலர் தாகூர். ஒரு சிறு நெருப்பு நன்மை பயக்கலாம். ஆனல் பெரும் நெருப்பு நன்மை தான் பயக்கும் என்ருே, தீமையே பயக்காது என்ருே சொல்ல முடியாது. அதுபோல் சிறிய அளவு தண்ணீர் மக்களுக்கு நன்மையே தருவது போல், பெரு வெள்ளம் மககளுக்கு இடர்பபாடுகளையே தரும். மாணவர் ஒவ்வொருவரும் மிக நல்லவராகவே இருப்பார். ஆனல் மாணவர் பலர் கூடிய கூட்டம் அல்லது கும்பல் (Gatherings) நல்ல விளைவுகளுக்கு மாருகத் தீய விளைவுகளையே

மிகுதியும் உண்டாகும். ஒருவரின் உள்ளம் இரண்டு உள்ளங்களாக இணையும்பொழுது உணர்வு வயப்படுகிறது. நூற்றுக்கணக்கான உள்ளங்களாக இணையும் பொழுதோ அறிவுணர்வை சிறிது இழக்கவே செய்யும். ஆயிரக்கணக்கான உள்ளங்கள் அறிவுணர்வை அறவே தவிர்த்தாலும் வியப்பதற்கில்லை. எனவே மாணவர்களின் மொத்த எழுச்சியில் அறிவுணர்வை விட மனஉணர்வே—இன்னுஞ்சொன்னால் வெறித்தனமே மிகுந்து தோன்றும். அவற்றால் தீமை விளையாது என்று கூறவே முடியாது. மனவியல் தெரிந்த எவரும் இவ்வுண்மையை மறுக்க முடியாது. கும்பலாகச் சேர்ந்தால் மாணவர் கூட்டமும் ஒன்றுதான்; மக்கள் கூட்டமும் ஒன்றுதான். இன்னும் அக்கூட்டம் நெறிமுறையும் கட்டுப்பாடும் அற்ற கூட்டமாக இருந்து விட்டால் சொல்லவே வேண்டியதில்லை. நடக்காத வெல்லாம் நடக்கும்; நேரக்கூடாத அழிவெல்லாம் நேரும். உந்துகள் சேதமுறுவதும், தீக்கிரையாவதும், பொதுச் சொத்துகளுக்கு இழப்பேற்படுவதும் இந்நிலையில்தான்? அந்த நிலையில் போராட்டத்தைத் தொடங்கிய மாணவர்களே அவை நேராமல் தடுக்க முயன்றாலும் நடவாது. எனவே, மாணவர்கள் தாம் அவற்றை நேரவிடாதபடி முன்னெச்சரிக்கையுடன் தடுத்து நிறுத்துதல் வேண்டும். அதற்குப் போராட்ட உணர்ச்சியையே அடியோடு தவிர்த்தல் வேண்டும். முறையீடு இருக்கலாம். போராட்டம் அறவே கூடாது.

ஆனால் மாணவர் சிலர்க்கு இவ்வறிவுரையே பிடிக்காது, அவர்கள் இதை ஒப்பவே மாட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் நன்றாகப் படிக்காத மாணவர்களாகவே இருப்பர்; அல்லது செல்வச் செருக்குள்ள மாணவர்களாக இருப்பர்; இல்லெனில் அரசியல் கட்சித் தொடர்புடைய மாணவர்களாக இருப்பர். பெரும்பாலும் எல்லா வகையான போராட்டங்களுக்குமே இத்தகையவர்கள்தாம் காரணியம். நன்றாகப் படிப்பில் நாட்டமில்லாத மாணவர்களுக்குப் பிற மாணவர்கள் மட்டும் படிப்பில் கவனம் செலுத்துவது பொறாத தன்மையாக விருக்கும். எனவே, அத்தகையவர்கள் போராட்டவுணர்வை ஒரு பொழுதுபோக்குணர்வு போல் கருதி, மற்ற மாணவர்களையும் அதில் ஈடுபடுத்திக் கல்வி முயற்சிக்கு முட்டுக்கட்டை போட முயல்வர். இன்னும் இத்தகையோர் மாணவர் தலைவர்களாகவோ செயலர்களாகவோ வந்துவிட்டால் சொல்லவே முடியாது. அந்தக் கல்லூரிக்கோ பள்ளிக்கோ என்றும் தலைவலிதான்.

இனி, செல்வ வளமுள்ள மாணவர்கள் தம் பணவலிமையால் எதையும் நிறைவேற்றிக் கொள்ளும் நினைவில் கல்வியில் கவனம் செலுத்தாமல், போராட்டங்களில் மிகுதியும் ஈடுபாடு கொள்வர். மொத்தத்தில் அவர்களுக்கு எந்தவகை இழப்பும் ஏற்படாது. அடுத்து அரசியல் கட்சித் தொடர்புடைய மாணவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவர்களின் இயக்கம் முற்றும் அரசியல் ஊதியம் கருதுவதாகவே இருக்கும். அவர்களை ஒன்றுஞ் செய்யவும் முடியாது.

இறுதியாகத் துன்புறுவதும் படிக்க வியலாமல் தொல்லைப்பட்டு இழப் பேற்படுத்திக் கொள்வதும் ஏழை மாணவர்களும் நடுத்தர மாணவர்களுந்தாம். இவர்களில் பெரும்பாலோர் மாணவர் போராட்டங்களை ஆதரிப்பதே இல்லை ஆனால், தவிர்க்க வியலாமல் மற்ற வலிந்த மாணவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களாகப் போர்ராட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

முடிவாக இந்நிலைகளையெல்லாம் மாணவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கிருக்க வேண்டிய குறிக்கோள், நோக்கம் முழுவதிலும் கல்விதான் முகாமையானதாக இருத்தல் வேண்டும். போராட்டவுணர்வை அவர்கள் அறவே தவிர்த்தல் வேண்டும். எப்பொழுதும் அழிவுகள் ஆக்கங்களுக்கு வழி வகுப்ப தில்லை. தேவையான பொழுது அவர்கள் தேவைகளையும் கோரிக்கை களையும் முறையாக அதிகாரிகளுக்கும் ஆள்பவர்க்கும் பொது மக்களுக்கும் அறிக்கைகள் வழி எடுத்துரைக்கலாம். அந்நிலையில் அவர்கள் இரக்கத்தையும் பெறலாம்; கவனத்தையும் திருப்பலாம். உண்மையான கோரிக்கை முறையாகச் செய்யப் பெறுமானால் தோல்வியுறுவதே இல்லை. இறுதியாக ஒன்று. மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவே கூடாது. அவ்வகையில் அவர்களை அரசியல் தலைவர்கள் காவுக்கிடாய்களாகவே பயன்படுத்திக் கொள்வர். உலகிலேயே, இழிவானதும், கீழ்மை நிறைந்ததும், பொய்யானதும், போலியானதும், ஏமாற்று நிறைந் ததும், நேர்மையற்றதும், ஒழுக்கங்கெட்டதும், பண்பற்றதும், வஞ்சகம் நிறைந்ததும், திருந்துதற்கும் திருத்துதற்கும் இன்னும் சில நூற்றாண்டுகள் செல்ல வேண்டும் என்னும் நிலையில் உள்ளதும், ஏறியவர்களைக் கட்டாயம் நடுக்கடலில் கவிழ்த்துவிடுவதுமான ஓர் ஓட்டைப் படகைப் போன்றதும் அரசியல் ஒன்றுதான். மாணவர் களின் அறிவையும், ஆற்றலையும், ஒழுக்கத்தையும், வாழ்க்கை முயற்சிகளையும் இத்தகைய அரசியல் சூதாட்டக்களங்களில் வந்து இழந்து போக வேண்டாம் என்பதே நம் வேண்டுகோள்! இந் நாட்டின் எதிர்காலம் உயர்வடைய வேண்டுமானால் மாணவர்கள் இவ் வேண்டுகோளைப் புறக்கணிக்கவே கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம்!

—பெருஞ்சித்திரனார்.

---

அட்டைப் படப் பாப்பா பெயர்:

**இறை—பொற்கொடி இசைமொழி**

—'அடடே, அம்மா! எத்தனை மிடுக்கு!'

---

## அன்பர்களுக்கு.

தமிழ்ச்சிட்டுப் படிக்கும் குடும்பக் குழந்தைகளின் குறும்புப் படங்களை அனுப்பிவையுங்கள். நல்ல படங்கள், ஏற்ற பாடலுடன் அட்டையில் வரும். பெயர், பெற்றோர் பெயர்—தேவை.

# பயன் மொழிகள்.

## 'கீதையிலிருந்து……'

- போற்றுதலுக்குரிய ஒருவன் தூற்றப்படுவது இறப்பதிலும் இழிவே.

- வெறுமனே இருப்பதில் விருப்புக் கொள்ளாதே.

- சம அறிவோடு செயல் புரிவதைவிட ஆசையோடு செயல் புரிவது மிகக்கீழானது. சம அறிவின்கண் அடைக்கலம் புகுக. பயன் கருதுவோர் கயவர் ஆவர்.

- துன்பத்தில் துடியாத, இன்பத்தில் நாட்டம் இல்லாத, பற்று, அச்சம், சினம அற்ற உறுதியான உள்ளத்தை உடையவன் முனிவன் எனப்படுகிறான்

- எவன் எங்கும் ஆசைகளற்றவனாய், நலந் தருவதை அடைந்து மகிழாதும், கேடு தருவதை அடைந்து நொந்து கொள்ளாதும் இருக்கிறானோ அவன் அறிவு உறுதி பெறுகிறது.

- ஆமை தன் உறுப்புகளை அடக்கிக் கொள்வது போல் பொருள்களிடத்திலிருந்து பொறிகளை முழுதும் உள்ளிழுக்க வல்லவனுக்கு நிறையறிவு நிலைபெறுகிறது.

- அறிவிலி, முயற்சியில்லாதவன், ஐயமுறுபவன் அழிவடைகிறான். ஐயமுறுபவனுக்கு இவ்வுலகமும் இல்லை அவ்வுலகமும இல்லை.

## இராமகிருட்டிணர் கூற்றிலிருந்து…

- அரசனுடைய மனைவி தெருவில் இரந்து திரிவோனைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். அதுபோல இறைவனிடத்தில் பேரின்பம் அடையப் பெற்ற உயிரானது புன்மையான உலக இன்பங்களில் ஆசை வைப்பதில்லை.

- நச்சுப் பாம்புகள் நடமாடும் வீட்டில் வதிந்து வருபவர்கள் எப்போதும் மிகவும் கவனமாக இருப்பதைப் போல, உலகில் வாழும் மக்கள் காமத்துக்கும் காசு ஆசைக்கும் உட்படாமல் எப்போதும் கவனமாய் இருக்க வேண்டும்.

- நூல்களில் படித்துவிட்டு மட்டும் இறைவனை விரித்துரைக்க முயல்வது தேசப்படத்தில் ஒரு நகரைப் பார்த்துவிட்டு, அந்நகரைப் பற்றி இன்னொருவருக்கு விரித்துரைக்க முயல்வதை ஒத்ததாகும்.

- கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓட்டம் பிடிக்கிறான். அதுபோல அறியாமை (மாயை)யின் இயல்பு இன்ன

தென்று நீ ஆராய்ந்து கண்டுபிடித்துவிட்டால் அஃது உன்னிடமிருந்து மறைந்தோடுகிறது.

- வெறுங் கண்ணாடியில் எந்த உருவமும் பதிவதில்லை. ஆனால் தகுந்த அறிவியற் பொருளை அக் கண்ணாடியின் மேல் பூசிய பிறகு, படங்களை எழுதலாம். அதுபோல பத்தியாகிய அறிவியற் பொருளை உள்ளத்தின் மீது தடவினால், அங்கு இறைவனின் உருவத்தைப் பதியச் செய்யலாம்.

- நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்து விட்டால் அவ்வேளையில் உலக இன்பத்தைப் பற்றி நினைக்க யாருக்கும் இயலாது. ஏனென்றால், மனம் முழுதும் துயர் சூழ்கிறது. அதுபோல யாருடைய மனம் முழுதும் இறைவனிடத்தில் திரும்புகிறதோ அவனால் உலக இன்பங்களை நினைக்க முடியாது.

தொகுப்பு:—சி. நா. செந்தமிழ்ச்செல்வன்

---


## வேலை வாங்காமை குற்றம்!

மேற்கு செர்மன் வீட்டுவாய்ப்பு அமைச்சகத்தில் மூத்த எழுத்தராகப் பணியாற்று 'பிரா' என்னும் பெண்மணி, தமக்கு அலுவலகத்தில் வேலையே கொடுக்கப் படவில்லை என்று குற்றம் சாட்டித் தமது மேலதிகாரிகள் மீது அண்மையில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். அதற்கு அடிப்படையாக "வேலை நாட் குறிப்பு" ஒன்றையும் வழக்கு மன்றத்தில் பதிவு செய்தார். 34 நாட்களாகத் தமக்கு ஒரு வேலையும் கொடுக்கப்படவில்லை என்றும, ஒரே ஒருநாள் மட்டும் ஒன்பது நிமையங்கள் வேலை செய்ததாகவும், இதன் விளைவாகத் தனது எடையில் 30 கையெடை (பவுண்டுகள்) கூடி விட்டது என்றும், அவர் குற்றம் சாட்டினர். வழக்கு மன்றத்தில் அவர் வழக்கு தோற்று விட்டது. ஆனால், வீட்டு வாய்ப்பு அமைச்சகத்திற்கு வழக்குமன்றம் ஒரு கருத்துரை கூறியது; "பிராவின் சம்பளத்திற்கேற்ப குறைந்த அளவு வேலையாவது அவரிடம் வாங்கப்பட வேண்டும்." என்பது அது.

---

## தனி ஒருவர் செய்யும் அணுகுண்டு.

அமெரிக்காவில், பிரின்சுடன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பூதவியல் ஆய்வாளர் ஒருவர், நான்கு மாத காலத்தில், அணுகுண்டு ஒன்றைத் தாமே செய்துள்ளார். 1945-இல் ஈரோசிமாவில் 75,000 பேரைக் கொன்ற அமெரிக்க அணுகுண்டின் ஆற்றலில் மூன்றில் ஒரு பங்கு இதில் உள்ளது என்று அந்த அறிஞர் கூறினர். பொன்னகம் (புளுட்டோனியம்) கிடைத்தால், ஒரு தனி ஒருவரால் இதுபோன்ற அணுகுண்டைச் செய்ய முடியும்" என்று அவர் குறிப்பிட்டார்.



கடல்வாழ் உயிரினங்கள் சில:—

## 1-பேய்க்கணவாய்!

'ஆக்டப்பசு' என்னும் பேய்க்கணவாய் இது. இதற்கு எட்டுக்கைகள் உண்டு. முத்துக் குளிப்பவர்களைக் கனவிலும் கலங்க வைக்கும் கடல் உயிரி இது. அயர்ந்து மறந்து அகப்பட்டவர்களை அந்த எட்டுக்கைகளும் எட்டுப் பாம்புகள் போல் வளைந்து பற்றிச் சுருட்டிக் கடலடியில் இழுத்துச் சென்று கொன்றுவிடும்; கவனக் குறைவாக இருந்து இவ்வாறு உயிர் துறந்த முக்குளிப்போர் பலர்.

பேய்க் கணவாயின் உமிழ்நீர்ச் சுரப்பியில் ஒருவகை நஞ்சும் ஊறுகிறது. தன் கடலடித் தாக்குதலுக்கு இலக்காகியவர் மேல் இந்த நஞ்சை உமிழ்ந்து செயலற்றவராக்கி விடுகிறது இது.

ஆனால் இதே பேய்க்கணவாயின் உமிழ்நீர் மக்களின் நெடுஞ்சாங்குலை நோய்க்கு மிகச்சிறந்த மருந்தாக அமைகிறது. இதைக் கண்டுபிடித்தவர். பர். பூருசு ஆல்சுடெடு என்னும் உயிரியல் அறிஞராவர். இவர் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா உலக உயிரியல் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளவர். இந்தப் பேய்க்கணவாயின் உமிழ் நீரிலிருந்து கிடைக்கும் நஞ்சு குருதி உறையாதபடி செய்கிறது. நெஞ்சத்துடிப்பு ஒழுங்காக இல்லாத நோயைக் குணப்படுத்த இந்நஞ்சு பயன்படும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

# நிலத்துக்கடியில் தெருக்களைக் கொண்ட புதிய நகரம்!

சோவியத்து நாட்டுத் தலைநகரான மாசுக்கோவுக்கு வடக்கே செர்த்தனேவோ என்ற புதிய புறநகர் உருவாகி வருகிறது. 20 ஆயிரம் மக்கள் வாழும் அளவுக்கு 80 'எக்டர்' பரப்பளவில் 16 மாடிகள் கொண்ட குடியிருப்புப் பகுதிகளைக் (பிளாட்) கொண்ட இந்த புதிய நகரின் புதுமை என்னவென்றால், இந்தப் புறநகரில் போக்குவரத்து வழிகள் யாவும் தரைப் பரப்பின் மீது இல்லாமல், நிலத்துக்கடியில் நிலத்தடிச் சாலைகளாகவே உருவாகி வருகின்றன. இந்தப் புதிய நகரின் நுழைவாயிலில் பெரிய ஒரு சுரங்கப்பாதை தொடங்குகிறது. இதுவே அந்நகரின் முகாமைப் போக்குவரத்து வழியின் தொடக்கமாகும். ஏறத்தாழ ஓர் அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) நீளமுள்ள இந்தச் சுரங்கப்பாதை அந்தப் புறநகருக்கு அடியில் குறுக்காகச் செல்கிறது. இதன் இருபுறத்திலிருந்தும் போக்கு வரத்துக்கான நிலத்தடிச்சாலைகள் பிரிந்து செல்லும். இந்தச் சாலை களின் மூலம் வீடுகளுக்கும் கடைகள் நடுவத்திற்கும் செல்லலாம்.

தரைப் பரப்பில் உள்ள சாலைகளைப் பாதவழியினர் மட்டுமே பயன்படுத்துவர். தரைப் பரப்பில் பெரும்பாலான பகுதியில் பூங்காக்களும், பழத்தோட்டங்களும் விளையாட்டுத் திடல்களுமே இடம் பெறும். அந்நகர மக்கள் தத்தம் வீடுகளுக்கு எவ்வாறு திரும்பிச் செல்வர் தெரியுமா? நகரின் எல்லையை எட்டியதும், வாடகி வண்டிகள், மக்கள் போக்குவரத்து ஊர்திகள் முதலியவை யாவும் சுரங்கப்பாதைக்குள் நுழைந்து நிலத்தடித் தெருக்களின் வழி யாகச் செல்லும், தரைப் பரப்பின் மீதுள்ள குறிப்பிட்ட குடித்தனப் பகுதிக்குச் செல்வதற்கு உதவும் வகையில் சுரங்கப்பாதையில் ஆங்காங்கே அறிவிப்புப் பலகைகள் இருக்கும். அவற்றின் துணைக் கொண்டு, குறிப்பிட்ட இடத்தில் இறங்கிக் குறிபிட்ட வீட்டுகருச் சென்று விடலாம்.

இந்தநிலத்தடி வழிகளில் இயங்கிகளை நிறுத்தி வைக்கவும் இடம் உண்டு. மேலும் இரு குடும்பங்களுக்கு ஒன்று மேனி இயங்கி நிறுத்தி வைப்பதற்கான வண்டிக் கொட்டமும (garage) அங்கு உண்டு. நிலத்துக்கடியில் உள்ள இந்த வண்டிக்கொட்டங்கள் மிகவும் ஏற்றானவை. அங்கு நிறுத்தப்படும் இயங்கிகளிலிருந்து வெளிப்படும் புகை முதலியவை அங்கிருந்து நிலப்பரப்புக்கு மேலுள்ள கட்டிடங் களின் முகடு வரையிலும் செல்லும் குழாய்களின் மூலம் வெளியேறி விடும்.

மேலும், இந்தப் புதிய நகரில் குப்பைகளை அகற்றும் நிலையமும் நிலத்துக்கடியிலேயே இருக்கும். வீடுகளிலுள்ள செங்குத்தான குழாய்களின் மூலம் கொட்டப்படும் குப்பைகள் நிலத்துக்கடியில் வந்து சேரும். அவ்வாறு வந்து சேரும் குப்பைகள் உறிஞ்சு எந்திரங் களால் உறிஞ்சப் பெற்றுக் குப்பைகளை அகற்றும் நிலையத்துக்கு வந்து சேரும். அவ்வாறு வந்து சேரும் குப்பைகள் அங்கு அமுக்கிக் கட்டப்பெற்று, தனியமைப்புக் கொள்கலங்களின் மூலம் அங்கிருந்து வெளியேற்றப்படும். இதற்கான எந்திரங்களும் அங்கு நிறுவப்பட்டு வருகின்றன. 0

# கி. பி. 2000-ஆம் ஆண்டுக்குள் செயற்கை நெஞ்சாங்குலை!

செயற்கை நெஞ்சம் செய்வதில் உள்ள சிக்கல்கள் பலவும் தீர்க்கப் பட்டு விட்டன. இயற்கை நெஞ்சம் போலவே திறமையான செயற்கை நெஞ்சத்தை கி.பி. 2000-ஆம் ஆண்டுக்குள் (அஃதாவது இன்னும் 12 ஆண்டுகளுக்குள்) செய்துவிட முடியும் என்று சோவித்து அறிஞர்களும் அமெரிக்க அறிஞர்களும் நம்புகின்றனர். மாற்று உறுப்புகள் பொருத்தும் மாசுக்கோ கழக நெறியாளர் பேராசிரியர் வலேரி சுமகோவ் அமெரிக்கா சென்று, புகழ்பெற்ற அமெரிக்க அறுவைப் பண்டுவ அறிஞரான டாக்டர். மைக்கேல் டி பாகே யுடன் பேசிவிட்டுத் திரும்பியவுடன் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்

இவர்கள் இருவரும் 1974-ஆம் ஆண்டில் அரசுகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி நிறைவேற்றப்பட்டு வரும் செயற்கை நெஞ்சம் அணியப்படுத்தும் தேசிய திட்டங்களின் இணைப் பாளர்கள் ஆவர்.

செயற்கை நெஞ்சத்தின் புதிய மாதிரி ஒன்றை இரு நாடுகளின் திறவோர்களும் கூட்டாகச் செய்யும் பணியை இந்த ஆண்டு இலையுதிர் காலத்தில் தொடங்கத் திட்டமிட்டிருப்பதாகப் பேராசிரியர் சுமகோவ் அறிவித்தார்.

இந்தத் துறையில் முதன் முதலாகக் கூட்டு ஆய்வு ஓர் ஆண்டுக்கு முன்னால் மாசுக்கோவில் நடைபெற்றது. சோவியத்து ஒன்றியத்திலும் அமெரிக்காவிலும் செய்யப்பட்ட செயற்கை நெஞ்சங்களை, அறுவைப் பண்டுவ அறிஞர்கள் விலங்குகளுக்குப் பொருத்தினர். இதே போன்ற ஆய்வுகள் நடத்துவதற்காக இரு தரப்பினரும் மாதிரிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

சோவியத்து அறிஞர்கள் செய்த மூன்று மாதிரி—நெஞ்சங்கள் அமெரிக்க அறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டன; அமெரிக்கர் செய்த மூன்று மாதிரி—நெஞ்சுகள் சோவியத்து அறிஞர்களிடம் உள்ளன. இத்தகைய பரிமாற்றம் இருபுறத்தாலும் பயனுள்ளது என்றும், சிக்கல்களின் சில வகைகளுக்கு இரு தரப்பினரும் அறிவு அடிப் படையிலான தீர்வு கூற முடியுமென்றும், பேராசிரியர் சுமகோவ் கூறினார்.

சோவியத்து ஒன்றியத்திலும் அமெரிக்காவிலும் செய்யப்பட்ட செயற்கை நெஞ்சங்கள், அளவிலோ, எடையிலோ இயற்கை நெஞ்சத்

திலிருந்து அதிகம் மாறுபடவில்லை. எல்லன்(டசன்) கணக்கான புனை வரைவுகளிலிருந்து இவை தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றின் கனம் ஏறத்தாழ 300 முதல் 350 சீரெடை(கிராம்) வரை உள்ளது. இவற்றின் மேற்பரப்பு உறுதியாக உள்ளது. செயற்கை நெஞ்சம் பொறுத்தப் பெற்ற கன்றுகள், மூன்று நாள் வரை உயிருடன் இருந்தன.

மாந்த நெஞ்சாங்குலை ஒரு நாளைக்கு ஓர் இலக்கம் முறை சுருங்கி விரிகிறது; அவ்வளவு இயக்கத்தைத் தாங்கக் கூடிய உறுதியான பொருளைக் கண்டுபிடிப்பதுதான் இன்றைய சிக்கல். செயற்கை நெஞ்சத்திற்குள் பொருத்தக் கூடிய ஒரு விசைப் பொருளை கண்டு பிடிக்கவும் சோவியத்து, அமெரிக்க அறிவியலார் முயன்று வருகின்றனர். அஃது, அணு ஆற்றலைப் பொறி ஆற்றலாக மாற்றும் முறையையோ அல்லது மறுதிறன்நிரப்பு (Recharge) செய்யக் கூடிய மின்கலன் (Battery) முறையையோ, அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். o

## இன்னும் அடிமைதான்.

—மா. பூங்குன்றன். அறி. இ; க.மு.

உரோம் நாட்டில் ஒரு மெய்யறிவாளர் எபிக்டெடசு என்பவர் இருந்தார். அவர் ஒரு கிரேக்க அடிமை. உரோம் அரசருக்கு அடிமையாக இருந்த அவருக்கு ஒவ்வொரு சிறிய குற்றத்திற்கும் பெரிய தண்டனை வழங்கப்பட்டது.

ஒருமுறை எபிக்டெடசு ஏதோ ஒரு குற்றத்திற்காகக் கடுமையாக அடி வாங்கினர். அப்போது வாங்கிய அடியில் ஒரு கால் ஒன்று உடைந்து விட்டது. எனவே நொண்டியாகி விட்டார். அவருடைய நண்பர் ஒருநாள் நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தார். வந்தவுடன் எபிக்டெடசைப் பார்த்து இரக்கப்பட்டு, "ஐயையோ எப்படி நொண்டியானீர்கள்?" என்று கேட்டார்.

"நான் எங்கே நொண்டியானேன். என் கால்தான் நொண்டியாகி விட்டது. இப்போது இந்தக் கால் என் அடிமையாக இல்லாமல்- கட்டுப்படாமல்- இயங்குகிறது. நான் அடிமையாகவேதான் இருக்கிறேன். இன்னும் நொண்டியாகவில்லை" என்றார்.

*சிறுகதை*

# நீலப் படுக்கை விரிப்பு

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு மகன் ஒருவன் இருந்தான். அவன் பெரியவனாக வளர்ந்தான். ஒரு நாள் அரசன் தன் மகனைக் கூப்பிட்டுக் கூறினான்:

"மகனே, உனக்குப் பெண் பார்க்க வேண்டிய வேளை வந்து விட்டது. நீ திருமணம் செய்து கொள்ள வேண்டாமா?"

"ஆம் தந்தையே. நான் நம் நாடு முழுவதும் சென்று, எனக்குப் பிடித்த மனைவியைத் தேர்ந்தெடுக்க உத்தரவு தாருங்கள்"

அரசன் இதற்கு இசை தந்தான். மகனும் பெண் தேடப் புறப்பட்டுப் பல அழகான, அறிவுள்ள, அன்புள்ள பெண்களைச் சந்தித்தான். ஆனால் அவனுக்கு யார் மீதும் காதல் ஏற்படவில்லை.

ஆனால், ஒருநாள், ஒரு சிற்றூரில் ஒரு பெண்ணைச் சந்தித்தான் இளவரசன். அவள் உயரமாக விருந்தாள்; அவளது கொடி இடையும், கடல் அலைகள் போன்ற கூந்தலும், எடுப்பான தோற்றமும் இளவரசனைக் கவர்ந்தன. அவளைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான்.

"நீ என்னை மணந்து கொள்வாயா?" என்று இளவரசன் அந்தப் பெண்ணைக் கேட்டான்.

"ஓ நீங்கள் யாரோ?"

"நான் ஓர் இளவரசன்"

"உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களுக்கு ஏதாவது தொழில் தெரியுமா?"

இளவரசன் வியப்படைந்தான். "தொழிலா? எனக்கு எதுவும் தெரியாது. நான் ஓர் இளவரசனாயிற்றே"

அந்தப் பெண் உரக்கச் சிரித்தாள்.

"அது தொழில் அன்று. இன்று நீங்கள் ஓர் இளவரசன்; நாளை ஏதாவது ஏற்படலாம்; நீங்கள் இளவரசன் பதவியை இழக்கலாம்; யார் அறிவர்? அப்பொழுது நீங்கள் உங்கள் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவீர்கள்? எனவே, நீங்கள் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வீர்களானால், நான் உங்களை மணந்து கொள்வேன். அப்படி இல்லை என்றால் உங்களை மறுபடியும் பார்க்கக் கூட நான் விரும்பவில்லை"

இளவரசன், மீண்டும் ஊர் சென்று தந்தையிடம் நடந்ததைத் தெரிவித்தான்; வருத்தப்பட்டான்.

உடனே, அரசன், கைவினைஞர்களை அழைத்து இளவரசனுக்குத் தொழில் பயிற்சி அளிக்கும்படி கட்டளை இட்டான். ஆனால், கைத்தொழிலைக் கற்க மூன்று ஆண்டுகள் ஆகும் என்று அறிந்த இளவரசன், அதுவரை அந்தப் பெண் காத்திருக்கமாட்டாள் என்றான்.

இப்படிப் பல தொழில் வினைஞர்களை அழைத்து அரசன், இளவரசனுக்கு அத்தொழிலைக் கற்றுத் தரும்படி கேட்டான். எல்லாத் தொழிலையும் கற்க நாட்கள் அதிகமாகும் என்று அறிந்த இளவரசன் வருத்தப்பட்டான். இறுதியாக ஒரு முதுமையான நெசவாளி மூன்று நாளில் நெசவுத் தொழிலை இளவரசனுக்குக் கற்றுத்தர முன்வந்தான். இளவரசன் கிழவரின் குடிசைக்குச் சென்று அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து, தன் ஆசானைப் போன்று அழகான படுக்கை விரிப்பை நெய்யக் கற்றுக் கொண்டு அரண்மனைக்கு வந்தான்.

அழகான படுக்கைவிரிப்பு ஒன்றை நெய்து அதனை எடுத்துக் கொண்டு மணப்பெண்ணைக் காணச் சென்றான். அதனைக் கண்ட அப்பெண், இளவரசனை மணக்க இசைந்தாள்.

மணப்பெண்ணை அரண்மனைக்கு அழைத்து வந்து மிகவும் சிறப்பாக, ஆடல், பாடல்களுடன் திருமணம் செய்து கொண்டு. மகிழ்ச்சியாகக் குடும்ப வாழ்க்கையைத் தொடங்கினான் இளவரசன்.

ஆண்டுகள் பல ஓடின. முதுமையான அரசன் இறந்ததும், இளவரசன் பட்டத்துக்கு வந்தான். அவன் ஆட்சி இயல்பாக நடந்து வந்தது. ஒரு நாள் அரசன் மாறுவடிவத்தில் நகர்வலம் செய்ய எண்ணினான். தன்னைப் பற்றி மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய, ஓர் இரப்போனைப் போல் புனைவு செய்து கொண்டு ஊர் சுற்றப் புறப்பட்டான். அரசன் வழிதெரியாமல், ஒரு கொள்ளைக் கூட்டத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டான். அவர்கள் அரசனைக் குகை (கல்முழை) க்கு இட்டுச் சென்றனர்.

"என்னைத் தொடுவதற்கு உங்களுக்கு என்ன துணிச்சல்? நான் உங்கள் அரசன்" என்று கத்தினான் மன்னன்.

"அப்படியானால், எங்களுக்கு நிறையப் பணம் கொடு" என்றனர் கொள்ளையர்.

"என்னிடம் பணம் கிடையாது; ஆனால், நீங்கள் இதுவரை பார்த்திருக்க முடியாத அழகான படுக்கை விரிப்பை என்னால் நெய்து தர முடியும். அதை விற்று நீங்கள் ஏராளமான பணம் பெறலாம், மூன்று நாட்களில் என்னால் நெய்து முடிக்க முடியும்" என்றான் அரசன்.

"அப்படியானால் சரி, நாங்கள் காத்திருக்கிறோம்".

அரசனை ஓர் அறையில் வைத்துப் பூட்டினர், திருடர்கள். படுக்கைவிரிப்பு நெய்யத் தேவையான பொருட்களை அரசனிடம் தந்தனர்.

விரிப்பு 3 நாட்களில் அணியம் ஆகியது. கொள்ளையர் வியந்தனர். மிகவும் விலை உயர்ந்தது என அவர்கள் ஒப்புக் கொண்டனர். திருடர்கள் அந்த நீல விரிப்பை நகரத்திற்கு எடுத்துக் கொண்டு சென்று விலை கோரினர். எல்லோரும் அந்தப் படுக்கையை விரும்பினார்களேயொழிய, வாங்க யாரும் முன் வரவில்லை. காரணம், அவ்வளவு விலை கொடுத்து வாங்குவதற்கு யாரிடமும் ஏராளமான பணம் இருக்கவில்லை. திருடர்கள் சினத்துடன் திரும்பி வந்தனர்.

"இந்த விரிப்பை யாரும் விலைக்கு வாங்கவில்லை. எனவே நாளை நீ இறக்கப் போகிறாய்" என்று அரசனிடம் கூறினர்.

"அப்படியானால் நாளைக்கு நீங்கள் அரண்மனைக்குச் சென்று அரசியிடம் காட்டுங்கள். அவள் கண்டிப்பாக இதனை வாங்கிக் கொள்வாள்" என்றான் அரசன்.

திருடர்கள் அரசியிடம் சென்றனர். அரசி, அரசன் வராததினால் மிகவும் சோர்வுற்று வருத்தத்துடன் காணப்பட்டாள். நீலப் படுக்கை விரிப்பைக் கண்டதும், பேச்சற்றவளானாள். அது தன் கணவனால் நெய்யப்பட்டது என்பதை அவள் உணர்ந்தாள். அதன் ஓரங்களில் கீழ்க்காணும் செய்தி எழுதப்பட்டிருப்பதை அவள் கவனிக்கத் தவறவில்லை;

"நான் திருடர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டுள்ளேன். உடனே உதவிக்கு ஏற்பாடு செய்யவும், இல்லாவிட்டால் விரைவில் கொல்லப்படுவேன்".

இதனைப் படித்த அரசி, ஒன்றும் தெரியாததுபோல் படுக்கை விரிப்பை அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டாள். திருடர்கள் திரும்பிப் போன பிறகு, படைகளைக் முழைக்கு அனுப்பி அரசனை மீட்டு வரச் சொன்னாள். போர் வீரர்கள் கொள்ளைக் கூட்டத்தை அழித்து, அரசனை மீட்டு வந்தனர்.

அரசனைக் கண்டதும் அரசி கூறினாள்: "இப்பொழுது கூறுங்கள்; இத்தொழிலை நீங்கள் கற்று இராவிட்டால், என்ன ஏற்பட்டு இருக்கும்? வெறும் அரசனாக மட்டும் இருந்திருந்தால், திருடர்கள் உங்களைக் கொன்று விட்டிருப்பார்கள் அன்றோ". o

124

# மாந்த உணர்ச்சிகளை மரங்களும் உணர முடியுமா?

ஆம் என்ற முடிவுக்கே அறிவியல் அறிஞர்கள் வந்துள்ளனர். சோவியத்து நாட்டு ஆசிரியவியல் அறிவியல் பேரவையைச் சேர்ந்த ஆராய்ச்சிக் கல்லூரியில் பணியாற்றி வரும் வெனியாமின் புட்கின் என்ற அறிஞர் பல ஆய்வுகளை வெற்றிகரமாக நடத்திய பின், "நிலைத்திணைகள் மாந்த உணர்ச்சிகளை உணர்ந்து கொள்கின்றன" என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

"மாந்த உணர்ச்சிகளை நிலைத்திணைகளும் உணர்கின்றன என்ற கருத்து ஒன்றும் புதிதன்று. ஆயினும் நாங்கள் முதன் முறையாக எங்கள் ஆய்வுகளில் மனக்கவர்ச்சி (இப்னோசிசம்) முறையைப் பயன் படுத்திப் பார்த்தோம். அஃதாவது மாந்த உணர்ச்சிகளை நிலைத் திணைகளுக்குத் 'தெரிவிக்கவும் நிறுத்தவும்' கூடிய ஒரு முறையைக் கையாண்டோம். இதன் மூலம் அந்த உணர்ச்சிகளை நிலைத்திணைகள் உணர்ந்து கொள்ளும் திறன் பற்றி எங்களுக்குத் திட்டவட்டமான விடைகள் கிடைத்தன" என்று கூறுகிறார் வெனியாமின் புட்கின்.

இன்று மருத்துவத் துறையில் உயிரியல்—மின்சார அடிப்படையில் அமைந்த பல்வேறு மின்னணுக் கருவிகள் நோய்களை அறிவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. எங்கள் ஆராய்ச்சிக் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மாந்த மூளைப் புறணியின் கண்ணறைகளில் ஏற்படும் மின்னோட்டங்களை ஆராய்வதற்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படும் 'என்செலோகிராப்' கருவி யொன்றை நிலைத்திணைகள் புலனத்திலும் பயன்படுத்திப் பார்த்தனர். அந்தக் கருவியின் உணர் முனைகள் மாந்தர்களை ஆயும் போது பொருத்தப்படுவது போலவே மரத்தின் இலைகளோடு பொருத்தப்பட்டன. அந்த மரத்துக்கு அருகில் ஒருவர் அமர்ந்தார். அவர் மனக்கவர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டார். அவரது மனத்தில் அச்சம், மகிழ்ச்சி, துயரம், வியப்பு, துன்பம், இன்பம் முதலிய சார்பு, சார்பற்ற உணர்ச்சிகள் பலவும் மாறிமாறித் தூண்டப் பெற்றன. அப்போது இந்த உணர்ச்சிகள் யாவும் மரத்தின் "மனநிலை"யிலும் எதிரொலிப்பதைக் கண்டுணர முடிந்தது. 'என்செலோகிராபின்' பதிவேட்டில் ஒவ்வொரு முறையும் வெவ்வேறு விதமாக விளைவு பதிவாயிற்று. இந்த ஆய்வுகளைப் பலமுறை திரும்பத் திரும்ப மேற்கொண்ட போதும், அதன் விளைவுகள் ஒன்று போலவே இருந்தன.

இந்த ஆய்வுகளின் பயன்களால் அறிவியலுக்கும் நடைமுறை வாழ்வுக்கும் கிட்டக் கூடிய ஊதியம் என்ன? அதற்கும் வெனியாமின் புட்கின் பின்வருமாறு விடையளிக்கிறார்:

• "முதலாவதாக, இயற்கையிலும், நரம்புக் கண்ணறைகளிலும், நிலைத்திணைக் கண்ணறைகளிலும் ஏதோ ஒரு வகையில் அவற்றின் செயல்களுக்குள் ஓர் ஒற்றுமை இருக்கிறது என்பதும், நிலைத்திணைக் கண்ணறைகளின் 'மொழி' ஏதோ ஒரு வகையில் நரம்புக் கண்ணறையின் 'மொழி'"யோடு தொடர்புள்ளது என்பதும் நமக்கு இப்போது தெரியவந்து உள்ளது.

"உலகில் நிலைத்திணைகள் தோன்றிப் பல்லாண்டுகளுக்குப் பின்னர்தான் உயிரிகள் தோன்றின. எனவே நிலைத்திணைக் கண்ணறையுடன் ஒப்பிடும் போது, நரம்புக் கண்ணறை பின்னால் உருவானதேயாகும். இதிலிருந்து, நிலைத்திணைக் கண்ணறையின் செய்தி அமைப்பிலிருந்தே மாந்தப் புலனறிவின் பல கூறுகள் தோன்றின என்றும், மாந்த உடம்பின் செய்தியறியும் அமைப்பு முழுவதும் எவ்வளவுதான் சிக்கல் மிக்கதாக இருந்த போதிலும், அது அடிப்படையில் நிலைத்திணைக் கண்ணறையோடு நெருங்கிய உறவு கொண்டதே என்றும் நாம் முடிவு கட்ட முடியும். இந்த முடிவு மிகவும் முகாமையானது. ஏனெனில், இது நரம்பு மண்டலத்தின் தோற்றம் பற்றிய ஒரு புதிய அணுகல் முறைக்கே வழி வகுக்கிறது."

—சோவியத்துச் செய்தி

---

## ஒரு பெண்ணுக்கு இழப்பீடு!

திரசாக்கோ என்ற இத்தாலிய நகரில் ஒரு வாடகி (Taxi) ஓட்டுநர் ஒரு பெண் மீது தம் வண்டியை ஏற்றி விட்டார். அவள் மருத்துவமனையில் இருந்து ஒவ்வொரு நாளுக்கும் 20,000 'லைரா' இழப்பீடாக அந்த வாடகி ஓட்டுநர் கொடுக்க வேண்டும் என்ற வழக்கு மன்றம் உத்தரவிட்டது. மனைவி, தாய், பணிப்பெண், சமையல்காரி, துணி வெளுப்பவள், இல்லத் தலைவி, தையல்காரி, வீட்டைப் பராமரிப்பவள் என்னும் 8 பணிகளை அவள் செய்வதால், இத்தகைய இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்று இத்தாலிய வழக்குமன்றம் கூறியது.

18

# சொற்கள் சொல்லும் கதைகள்.

## (To know a word is to know a truth)

பன்மொழிப்புலவர்: இரா. மதிவாணன், க.மு

### மணத்தல்

மணத்தல் என்றால் தழுவிக் கொள்ளுதல் என்று பொருள். கொடி கொம்பை மணந்தது என்றால் பூங்கொடி மரக் கொம்பைத் தழுவிக்கொண்டது பொருள். நாளடைவில் இச்சொல் திருமணத்தைக் குறிப்பதாயிற்று.

மணத்தல் என்னுஞ் சொல்லுக்குக் கலத்தல் என்றும் பொருளுண்டு. காற்றோடு கலந்து வரும் பூவின் நல்வாடை மணம் என்றும் காதல் உள்ளங்கள் தம்முள் கலப்பது திருமணம் என்றும் வழங்கப்படுகின்றன. வடசொல்லான விவாகம் என்பதற்குத் தூக்கிக் கொண்டு போதல் எனப்பொருள் கூறப்படுதலால், விவாகத்தை விட திருமணமே பொருள் நலம் பொதிந்த சொல்லாதலைக் காண்க.

### ஈயார் தேட்டை

யாருக்கும் ஈயாத கருமிகளின் செல்வத்தைத் கள்வர் போன்ற தீயவர் கைக் கொள்வர் என்னும் பொருளில் 'ஈயார் தேட்டை தீயார் கொள்வார்' என்னும் நன்மொழி வழங்கி வருகிறது.

ஆனால், இது இருபொருள் படுவதாகவும் இருக்கிறது. மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் இதற்குக் கீழ்க்கண்டவாறு வேறு பொருளுரைப்பார்.

ஈயார்—தேனியர் (தேனீக்கள்)
தேட்டை—தேடிய செல்வம், தேன்
தீயார்—தீப்பந்தத்தைக் கையிலேந்தித் தேன் அழிப்பவர்கள்
கொள்வார்—தேனைக் கைக்கொள்வார்.

### சம்பளம்

பழங்காலத்தில் சம்பளம் என்னும் சொல் நெல்லையும் உப்பையும் குறித்தது. சம்பு—நெல்; அளம்—உப்பு சம்பு + அளம் சம்பளம் = நெல்லும் உப்பும்.

பண்டமாற்றுக் காலத்தில் உடல் உழைப்பாளர்க்கு நெல்லும் உப்பும் கூலியாகத் தரப்பட்டது. இச்சொல் நாளடைவில் மாதந் தோறும் உழைப்பாளர்க்குப் பணமாகக் கொடுப்பதையும் குறிக்கத் தொடங்கியது.

# தீந்தமிழ்க்காக உழைத்திடுக!

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன்.

கருத்தாய்க் கல்வி கற்றிடுக!
காலம் இடம்செயல் அறிந்திடுக!
ஞாலம் போற்ற வாழ்ந்திடுக!
நயம்படக் கருத்தை உரைத்திடுக! 1

உரிமை உணர்வைப் போற்றிடுக!
ஒழுக்கம் நிறைந்து விளங்கிடுக!
அறிவைப் பெற்றே உயர்ந்திடுக!
ஆக்கப் பணிகளை ஆற்றிடுக! 2

அன்பை உளத்தில் மலர்த்திடுக!
அன்னைத் தமிழை வளர்த்திடுக!
புன்மை உணர்வைப் போக்கிடுக!
புனைவின் வாலை அறுத்திடுக! 3

எண்ணச் சிறகை விரித்திடுக!
இன்றமிழ் வானில் பறந்திடுக!
திண்மை யோடே திகழ்ந்திடுக!
தீந்தமிழ்க் காக உழைத்திடுக! 4

ஆன்றோர் சொல்லை மதித்திடுக!
அறிவியல் நூற்கள் படித்திடுக!
இலக்கியம் இலக்கணம் பயின்றிடுக!
இலக்குடன் வாழ்வை நடத்திடுக! 5

---

## கல்வி வரவில்லை! கல்வியமைப்பே பொறுப்பு!

நியூயார்க்கு நகர இளைஞர் ஒருவர், 50 இலக்கம் தாலர் இழப்பீடு கோரி, அமெரிக்கக் கல்வி அமைப்பின் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். பள்ளியில் 12 ஆண்டுகள் பயின்ற போதும் தமக்குப் படிக்கத் தெரியவில்லை என்று அவர் கூறினார். "அவரது கோரிக்கையில் புதுமை ஒன்றும் இல்லை" என 'கார்டியன்' என்ற பிரிட்டிசு செய்தியிதழ் கூறுகிறது. நியூயார்க்குப் பள்ளிகள், எழுதப் படிக்கத் தெரியாதவர்களை மட்டுமின்றிச் செய்தித்தாள்களில் எளிய கட்டுரைகளை மட்டும் படிக்கத் தெரிந்தவர்களையும் தேர்வு பண்ணி விடுகின்றன. அமெரிக்கக் கல்வி அமைப்பு, இப்போது பகடிக்கு இடமாகி விட்டது. 2.3 கோடி அமெரிக்கர்களுக்கு வேலைக்கான வேண்டுகோள் தாள்களைப் படிக்கவோ, சலவைக்கான சவர்க்காரத் தூளைப் பயன்படுத்தும் வழிகளைத் தெரிவிக்கும் குறிப்புகளைப் படிக்கவோ தெரியாது என்று 'கார்டியன்' செய்தித்தாள் எழுதுகிறது!

# பாவாணர் ஆய்வுரைகள்!

தொகுப்பு:—கதிர்-தமிழ்வாணன்.

0. தமிழ் நாட்டின் வடபாகத்தில் 'லப்பை' என்றும், கீழ்ப் பாகத்தில் 'மரைக்காயர்' என்றும், தென்பாகத்தில் 'ராவுத்தர்' என்றும், மலையாளத்தில் 'மாப்பிள்ளை' என்றும்—நால்வகையாகச் சொல்லப்படும் முகமதியரெல்லாம், தோற்றத்தால் வேறுபட்டுக் காணினும் பிறப்பால் தமிழ் நாட்டுக் கிறித்தவரைப் போலத் தமிழர் அல்லது திராவிடரேயாவர்.

0. பண்டைத் தமிழருள், ஆடவர் 'குடுமி' வைத்திருந்தன ரேனும், ஆரியரைப் போல் மிகச்சிறிய உச்சிக் குடுமி வைத்திருக்க வில்லை. தலையைச் சுற்றிச் சிறிது ஒதுக்கிக் கொண்டனர்.

0. மீசையைச் சிரைத்துக் கொள்ளும் வழக்கம் ஆரியரதே, தமிழரிற் சிலர் மேலை நாட்டாரியரைப் பின்பற்றி இப்போது மீசையைச் சிரைத்துக் கொள்கின்றனர்.

0. வடமொழிக்கும்—தென்மொழிக்கும் வேறுபாடு:

எழுத்துகளின் தொகை (உண்மையானபடி) வடமொழியில் 42—தென்மொழியில் 30; வடமொழியொலிகள் வலியன—தென்மொழி யொலிகள் மெலியன; மூச்சொலிகள் வடமொழியில் மட்டுமே உண்டு; குறிப்பெயர் தமிழுக்கில்லை ("எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் தொல்காப்பியத்தை நோக்குக.) உயர்திணை அஃறிணைப் பாகுபாடும், வினைத்தொகையும் வடமொழியில் இல்லை; தமிழில் மிகச் சிறந்ததாகக் கருதப்படும் பொருளிலக்கணம் வட மொழியில் இல்லை.

0. ஆரியர் முருகன், திருமால் முதலிய தமிழ்த் தெய்வங்களைச் 'சுப்பிரமணியர்' விஷ்ணு' முதலிய ஆரியப் பெயர்களையிட்டு' ஆரியத் தெய்வங்களாகக் காட்டி, அதற்கான கதைகளையும் புனைந்து கொண்டு, தமிழர்களின் மதத்தலைவராகித் திருக்கோவில் வழிபாட்டை யும், மங்கல—அமங்கல வினைகளையும் தாமே ஏற்று வடமொழியில் நடத்தி வரலாயினர்.

அடிப்படைநூல்: பாவாணரின் 'ஒப்பியன் மொழிநூல்'

---

## புதின வைர நகைகள்

மேலை நாட்டுப் பணக்காரப் பெண்கள் தம் வைர நகைகளில் ஒரு புதிய பாணியை இப்பொழுது கையாண்டு வருகின்றனர். மரை முடுக்கி, (Spanner) வடிவத்தில் நகைகளை அவர்கள் அணிந்து கொள்கின்றனர். பிரான்சில் ஐந்து 'காரட்' (16 குன்றிமணி எடை) வைரம் பதித்த இத்தகைய, மரைமுடுக்கித் தொங்கட்டானின் விலை 2, 40, 000 பிராங்குகள்!

---

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).